# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# இரண்டாம் பத்து

## முதல் திருமொழி - வானவர்
## திருவேங்கடம் 4

** வானவர் தங்கள் சிந்தை போல * என் நெஞ்சமே! இனிது உவந்து * மா தவ
மானவர் தங்கள் சிந்தை * அமர்ந்து உறைகின்ற எந்தை **
கானவர் இடு கார் அகில் புகை * ஓங்கு வேங்கடம் மேவி * மாண் குறள்
ஆன அந்தணற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 1

உறவு சுற்றம் என்று ஒன்றிலா * ஒருவன் உகந்தவர் தம்மை * மண் மிசைப்
பிறவியே கெடுப்பான் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
குறவர் மாதர்களோடு * வண்டு குறிஞ்சி மருள் இசை பாடும் * வேங்கடத்து
அறவ நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 2

இண்டை ஆயின கொண்டு * தொண்டர்கள் ஏத்துவார் உறவோடும் * வானிடைக்
கொண்டு போய் இடவும் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
வண்டு வாழ் வடவேங்கட மலை * கோயில் கொண்டு அதனோடும் * மீமிசை
அண்டம் ஆண்டு இருப்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 3

பாவியாது செய்தாய் என் நெஞ்சமே! * பண்டு தொண்டு செய்தாரை * மண்மிசை
மேவி ஆட்கொண்டு போய் * விசும்பு ஏற வைக்கும் எந்தை **
கோவி நாயகன் கொண்டல் உந்துயர் * வேங்கட மலை ஆண்டு * வானவர்
ஆவியாய் இருப்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 4

பொங்கு போதியும் பிண்டியும் உடைப் * புத்தர் நோன்பியர் பள்ளியுள் உறை *
தங்கள் தேவரும் தாங்களுமே ஆக * என் நெஞ்சம் என்பாய்! **
எங்கும் வானவர் தானவர் நிறைந்து ஏத்தும் * வேங்கடம் மேவி நின்றருள் *
அங்கண் நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 5

துவரி ஆடையர் மட்டையர் * சமண் தொண்டர்கள் மண்டி உண்டு பின்னரும் *
தமரும் தாங்களுமே தடிக்க * என் நெஞ்சம் என்பாய்! **
கவரி மாக்கணம் சேரும் * வேங்கடம் கோயில் கொண்ட கண்ணார் விசும்பிடை *
அமர நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 6

தருக்கினால் சமண் செய்து * சோறு தண்தயிரினால் திரளை * மிடற்றிடை
நெருக்குவார் அலக்கண் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
மருட்கள் வண்டுகள் பாடும் * வேங்கடம் கோயில் கொண்டு அதனோடும் * வானிடை
அருக்கன் மேவி நிற்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 7

சேயன் அணியன் சிறியன் பெரியன் என்பதும் * சிலர் பேசக் கேட்டிருந்
தே * என் நெஞ்சம் என்பாய்! * எனக்கு ஒன்று சொல்லாதே **
வேய்கள் நின்று வெண்முத்தமே சொரி * வேங்கட மலை கோயில் மேவிய *
ஆயர் நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 8

கூடி ஆடி உரைத்ததே உரைத்தாய் * என் நெஞ்சம் என்பாய்! துணிந்து கேள் *
பாடி ஆடிப் பலரும் * பணிந்து ஏத்திக் காண்கிலா **
ஆடு தாமரையோனும் ஈசனும் * அமரர் கோனும் நின்று ஏத்தும் * வேங்கடத்து
ஆடு கூத்தனுக்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 9

** மின்னு மாமுகில் மேவு * தண்திருவேங்கட மலை கோயில் மேவிய *
அன்னமாய் நிகழ்ந்த * அமரர் பெருமானை **
கன்னி மாமதிள் மங்கையர் கலிகன்றி * இன்தமிழால் உரைத்த * இம்
மன்னு பாடல் வல்லார்க்கு * இடம் ஆகும் வான் உலகே 10

**அடிவரவு:** வானவர் உறவு இண்டை பாவியாது பொங்கு துவரி தருக்கினால் சேயன் கூடி மின்னு காசையாடை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---